தொடங்கப்பட்டன? அவற்றில் எத்தனை அலுவலகங்களுக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித் தரப்பட்டது? தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்ற பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் குறைவான ஆவணங்களே பதிவு செய்யப்படுகின்ற காரணத்தினால், அதைப் பிரிப்பதற்கான வாய்ப்பே இல்லை. வருங்காலத்தில் அங்கு ஆவணப் பதிவுகள் கூடுகின்றபோதுதான் பிரிக்கக்கூடிய முயற்சியில் இந்த அரசு ஈடுபடும். அதுமட்டுமல்லாமல், வாடகைக் கட்டடத்தைப் பொறுத்தமட்டில், சுமார் 50 சதவிகித அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 2 கோடி ரூபாய் வாடகையாக அரசு செலவு செய்து வருகிறது. கடந்த 4 ஆண்டு காலமாக 45 சார் பதிவாளர் அலுவலகங்கள் புதிதாகக் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

176—

குடும்ப அட்டை

***122976—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2010 மே 12]

பொதுவாக குடும்ப அட்டைகள் பெறவேண்டுமென்று சொன்னால், குடும்ப அட்டைகள் ஒப்புவிக்கின்ற சான்றிதழ், குடும்ப அட்டை இல்லை என்ற மறுப்பில்லாச் சான்றிதழ், பெற்றோர்கள்/உறவினர் குடும்ப அட்டையிலிருந்து பெயர்களை நீக்கல் ஆகிய சான்றுகளை வைத்துத்தான் குடும்ப அட்டைகளைக் கொடுக்க முடியும். ஆனால், நம்முடைய தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே ஒரு மனு கொடுத்தார்கள். கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென்று மனு கொடுத்தார்கள். அதன்மீது பரிசீலனை செய்கிறபொழுது, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்று ஒரு பகுதியும், கணவனால் முறையாக விவாகரத்துச் செய்யப்பட்டவர்கள் என ஒரு பகுதியும் இரண்டு வகைகளாக அதைப் பிரித்துக்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டது. அப்படிப் பரிசீலனை செய்யப்பட்டதிலே, கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் கணவர் குடும்பம் எந்த முகவரியில் வசிக்கிறது என்ற விவரத்துடன் விண்ணப்பித்தால், அங்கு சென்று விவரங்களை அறிந்து, அதன்மூலமாக நீக்கல் சான்று துறையின் சார்பாகவே அளிக்கப்பட்டு, அதன் பின்பு, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தனியாக இருந்தால், தனி கார்டாகவும், குடும்பத்தோடு, பெற்றோர்களுடன் இருந்தால் அந்த கார்டிலே அவர் பெயரை இணைத்து குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. விவாகரத்துப் பெற்றிருக்கிற பெண்களுக்கு நீதிமன்றத்தின்மூலமாகப் பெறப்பட்ட ஆணையை நீக்கல் சான்றாகக் கருதி, அதையே மையமாக வைத்து அந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், அவையில் இல்லை. அவருக்கு மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள அரவாணிகளுக்கு எத்தனை குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 மே 12

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் அரவாணிகளுக்கு 991 குடும்ப அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் வழங்கப்பட வேண்டிய நிலையிலே, இந்த வாரமோ, இன்னும் 10 தினங்களிலோ வழங்கப்பட வேண்டிய அட்டைகள் 15, அச்சடிக்கப்பெற்று, பரிசீலனையில் இருப்பது 9.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே காதல் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் எந்த அடிப்படையிலே குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு எப்போதும் கலப்புத் திருமணத்தை ஆதரிக்கிற அரசு என்கிற காரணத்தினால், கலப்புத் திருமணம் செய்தவர்கள், காதல் திருமணம் செய்தவர்கள், மதம் மாறித் திருமணம் செய்துகொள்ளக்கூடிய இவர்களுக்கெல்லாம் இந்த அரசு குடும்ப அட்டைகளை வழங்க வேண்டுமென்ற அந்த சீரிய நோக்கத்தோடு செயல்படுகிறது. அதற்கு அரசு எதைக் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது என்று சொன்னால், ஆண்களுக்கு 21 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும், பெண்களுக்கு 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். அப்படி நிறைவு பெற்றிருக்கிறவர்களுக்கு, நீக்கல் சான்று பெற குடும்பத் தலைவர் மனுவை அளிக்க வேண்டுமென்ற விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. ஏனென்று சொன்னால், பெற்றோர்கள் அதற்கு மனு கொடுக்கமாட்டார்கள். அதனால் அதிலிருந்து விதிவிலக்கு அளித்து, விதிகள் தளர்த்தப்பட்டு, பெற்றோர் குடும்ப அட்டையின் நகல் அல்லது குடும்ப அட்டை எண், அங்காடிக் குறியீட்டு எண், பெற்றோர் பெயர், குடும்ப அட்டையினுடைய முகவரி, தற்போது பெற்றோர்கள் குடியிருக்கின்ற முகவரி, திருமணப் பதிவுச் சான்று, ஆகியவற்றை இணைத்துக்கொண்டு விண்ணப்பித்தால், நேரடியாக

2010 மே 12]

அவர்கள் தங்குகிற இடங்களுக்குச் சென்று, விசாரணை செய்து, காதல் திருமணம் செய்துகொண்டவர்கள், மதம் மாறித் திருமணம் செய்துகொண்டவர்கள் ஆகியோருக்கு முறையாக உடனே, *60* நாட்களிலே குடும்ப அட்டை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *177*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

177—

ஆசிரியர் பயிற்சி

***39002**—**திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்கும் அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் இதுவரை எந்த அரசுக் கலைக் கல்லூரியோ, பி.எட். கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோ கிடையாது. இப்போது மானாமதுரை தொகுதியோடு இளையாங்குடி தொகுதியையும் தொகுதி மறு சீரமைப்பின் காரணமாகச் சேர்த்திருக்கின்றார்கள். அதன் காரணமாக, மானாமதுரை தொகுதியில் *3* ஒன்றியங்கள், *3* பேரூராட்சிகள், மானாமதுரை ஒன்றியத்தில் *39* ஊராட்சிகள், இளையாங்குடி ஒன்றியத்தில் *55* ஊராட்சிகள், திருப்புவனம் ஒன்றியத்தில்